257

தனி அலுவலர், பொன்மார் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), திருப்போரூர்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திரு.எம்.வெங்கட்ராகவன்.

ந.க.எண்.1510/2021/ஆ1.

நாள். .07.2021

பொருள் - மனைப்பிரிவு - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - பொன்மார் ஊராட்சி மற்றும் கிராமம் M/s.Asvini Fisheries Pvt.Ltd., என்பவரின் சர்வே எண்கள்.273/2A, 2B, 3, 4, 5, 274/1, 2A, 276/1, 277/1, 2, 3A, 278/1, 2, 293/4A, 4B-ல் 7.14 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் திட்ட அனுமதி அளித்து உத்தரவிடுதல் - சார்ந்து.

பார்வை - 1.துணை இயக்குநர் (பொ) / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் ந.க.எண்.803/2021/செமா-3 நாள்.09.07.2021.
2.நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், கோயம்பேடு, சென்னை அவர்களின் ந.க.எண். 5573/2021/TCP-5 நாள்.20.04.2021.
3.உதவிப்பொறியாளரின் கள ஆய்வு அறிக்கை நாள்.22.07.2021.
4.தானபத்திரம் எண்.6808/2021. நாள்.04.05.2021.
5.இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடித நாள்.13.07.2021.
6.பொன்மார் ஊராட்சி மன்றத்தீர்மான எண்.37 நாள்.15.07.2021 மற்றும் பலவகை வரவு ரசீது எண்.650 நாள்.20.07.2021.

*********

<u>உத்திரவு</u>

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் பொன்மார் ஊராட்சி மற்றும் கிராமம் M/s.Asvini Fisheries Pvt.Ltd., என்பவரின் சர்வே எண்கள்.273/2A, 2B, 3, 4, 5, 274/1, 2A, 276/1, 277/1, 2, 3A, 278/1, 2, 293/4A, 4B-ல் 7.14 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, பார்வை 1(ம)2-ல் காணும் செயல்முறைகளின்படி, ம.வ./ந.ஊ.இ எண்.106/2021 என எண்ணிடப்பட்டு, நிபந்தனைகளின் அடிப்படையில் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் உதவிப்பொறியாளரின் கள ஆய்வறிக்கையின்படி, ஊராட்சிக்கு பூங்கா, பொது உபயோகம், TANGEDCO சாலை மற்றும் மூலைமுடுக்கு ஆகியவை ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 4-ல் காணும் தானபத்திர எண். 6808/2021. நாள்.04.05.2021-ன்படி, பூங்கா, பொது உபயோகம், TANGEDCO சாலை மற்றும் மூலைமுடுக்கு ஆகியவை சேர்த்து 10704.95 Sq.m பரப்பு ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பார்வை 5-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி, சந்தை மதிப்புப்படி 3% தொகை ரூ.13,83,584/-(ரூபாய் பதிமூன்று இலட்சத்து எண்பத்தி மூன்றாயிரத்து ஐநூற்று எண்பத்தி நான்கு மட்டும்) பாரத மாநில வங்கியில் செலான் எண்.20 நாள்.16.07.2021-ன்படியும் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் ரூ.1,82,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பத்திரண்டாயிரம் மட்டும்) ஊராட்சியில் செலுத்தியமைக்கான பலவகை வரவு ரசீது எண்.650 நாள்.20.07.2021 மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

For ASVINI FISHERIES PRIVATE LIMITED

Director

## நிபந்தனைகள்

1) நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.
2) மேற்படி மனைப்பிரிவில் தானபத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றும் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.
3) எந்த ஒரு அடிப்படை வசதிக்கான கட்டமைப்பு பணி முடிவுற்ற பின்னர் இவ்வொன்றிய பொறியாளரிடம் அதற்கான தரச்சான்று பெற வேண்டும்.
4) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ண்பபதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ள வேண்டும்.
5) மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.
6) இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைத்தடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.
7) பார்வை 1-ல் காணும் செயல்முறையில் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் 1 முதல் 14 வரை அனைத்தும் பின்பற்ற வேண்டும்.
8) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியினை தெருமட்டத்திற்கு உயர்த்தப்படவேண்டும்.
9) 7.2மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களிலும், நிழல்தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்படவேண்டும்.

தனி அலுவலர், பொன்மார் ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
திருப்போரூர்.

பெறுநர்

M/s.Asvini Fisheries Pvt.Ltd.,
No.3, 2nd Canal Cross Road,
Gandhi Nagar, Adyar, Chennai – 600020.

நகல் - ஊராட்சி செயலர், பொன்மார் ஊராட்சி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.

For ASVINI FISHERIES PRIVATE LIMITED